# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 230 ஆங்கீரச ஆனி 30 (14.07.1992) செவ்வாய்


## சவர்க்காரங்கள் பெருமளவு விற்பனை

யாழ் பெரியகடைப்பகுதியில் நேற்று அதிகவிலையில் விற்ற சவர்க்காரங்களை 10 ரூபா வீதம் விற்க தமிழீழ காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தனர் நகரில் உள்ள சில கடைகளும் சோதனையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேபோல முக்கிய சந்தைகளில் சவர்க்காரங்கள் பெருமளவு விற்கப்பட்டதைக் காணமுடிந்தது. அதிகவிலையில் சவர்க்காரம் விற்பவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 06, 47

# அரச படைகளின் கடல், வான் வழி மேலாதிக்கத்தை அழிக்கும் திட்டம்

## புலிகள் நெருப்பை நெருப்பினால் எதிர்கொள்பவர்கள் என ஐலண்ட் கருத்து

விடுதலைப்புலிகள் அரசபடைகளுக்கு எதிராக புதிது புதிதாக எடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகள் அவர்கள் நெருப்பை நெருப்பினாலேயே எதிர் கொள்ள தயாராக இருப்பதையே காட்டுகிறது இவ்வாறு சண்டே ஐலண்ட் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது

இந்த வருட இறுதிக்குள் விடுதலைப் புலிகளின் மேலாதிக்கத்தை முறியடிக்க பாதுகாப்புப் படைகள் விரும்புகின்றன. ஆனால் சாத்தியப்படாத ஒன்றாகவே அது இருக்கிறது. கடந்த பத்து வருடங்களாக இந்த யுத்தம் தொடர்வதே இதற்கு காரணம் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன என 'ஐலண்ட்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை யொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவு பயிற்சி பெற்ற தீவிர உந்துதல் உள்ள விடுதலைப்புலிகளின் தாங்கி எதிர்ப்பு நடவடிக்கைகளை உதாரணமாகக் கூறலாம் விடுதலைப்புலிகள் நெருப்பை நெருப்பினாலேயே எதிர்கொள்ள எப்பொழுதும் தயாராக உள்ளவர்கள் எனவும் அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

### மூவாயிரம் படை பலி

மேலும் கடந்த இரண்டு வருடங்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுத படையினர் கொல்லப்படும் எண்ணாயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதையும் புதிய நடவடிக்கைகளை திட்டமிடும் போது இராணுவம் மறந்து விட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## 12 விமானங்கள் மேலும் தேவை என்கிறார் தளபதி

விமானப்படைக்கு இப்போது வேண்டியது அதிகரித்த தாக்குதல் ஆற்றல் கொண்ட விமானங்களே விமானப்படை வசமிருந்த இரண்டு வை 8 ரக விமானங்களும் மிகவும் பழையன. முழுமையாகப் பாவிக்கப்பட்டவை என விமானப்படை தளபதி ரெறன்ஸ் குணவர்த்தன சண்டேரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் கூறியுள்ளார்

"எமக்கு ஆகக் குறைந்தது ஆறு கூடுதல் தாக்குதல் ஆற்றலுள்ள விமானங்கள் தேவை பன்னிரண்டு விமானங்கள் இருந்தால் எமது இலக்கை நாம் இலகுவில் அடைவோம்" எனவும் அவர் கூறியுள்ளார்,

ஆனால் இதற்கு இன்னும் தெளிவான திட்டம் வகுக்கப்படவில்லையென்றும், அரசாங்கம் இதை இன்னும் அங்கீகரிக்கவில்லையென்றும் இதற்கான நிதியை ஏற்பாடு செய்வது பிரச்சினையாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுட்டு வீழ்த்தப்பட்ட வை 8 விமானத்தின் தற்போதைய விலை அறுபது லட்சம் யூ. எஸ் டொலர்கள் எனவும் தெரிவித்தார்.

● பி. பி. ஸி: செய்தியாளர்

## டாங்கிகளும், விமானங்களும் பிரச்சினைக்குத் தீர்வு தராது

டாங்கிகள். ஜெட் விமானங்கள். போர் கப்பல்கள் மூலம் இலங்கை உள்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என பி. பி. ஸியின் தூரகிழக்கு நாடுகள் செய்திப் பிரிவைச் சேர்ந்த ரொபட் அடெம்ஸ் குறிப்பிட்டுள்ளார்

எதிரிகள் புகமுடியாத இடம் என இராணுவம் கூறிக் கொண்ட இடத்தில் புலிகள் புகுந்து தாக்கி 50 படையினரை பலியெடுத்துள்ளனர் நிலப்பரப்புகளை படையினர் கைப்பற்றினாலும் தமது நடவடிக்கை ஓயாது என்பதை புலிகள் இதன் மூலம் காட்டியுள்ளனர்,

இராணுவம் இதை உணர்ந்ததாக தெரியவில்லை எனவும் அடெம்ஸ் மேலும் தனது குறிப்பில் சுட்டிக்காட்டுகிறார்.

● செட்டிகுளம் சம்பவம்

## ஒப்சேவர் பாராட்டினால் தளபதிக்கு சங்கடம்!

கடந்த வார சண்டே ஒப்சேவர் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன குறித்து பாராட்டி எழுதிய கட்டுரை வெளியான சில தினங்களில் செட்டிகுளம் கட்டுப்பொத்த இராணுவ முகாம் புலிகளினால் அழிக்கப்பட்டது.

இராணுவத் தளபதிக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன:

"ஜெரல் ஹமில்டன் வன சிங்க இராணுவத் தளபதியாக இருந்த காலங்களிலேயே படையினர் தமது முகாம்களை இழந்தனர், புதிய இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்ன பதவி ஏற்ற பின்னர் இராணுவ வெற்றிகள் கிடைக்கின்றன என கடந்த வார சண்டே ஒ சேவர் செய்தி வெளியிட்டிருந்தது.

புதிய இராணுவ தலைமை

— 04ஆம் பக்கம் பார்க்க

## ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச்சட்டம் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## பாதுகாப்புச் செலவினம் இரண்டாயிரம் கோடி

1992க்கான வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்பார்த்து ஏற்பாடு செய்த பாதுகாப்புசெலவின ஒதுக்கீடான ஆயிரத்து ஐநூற்றி நாற்பது கோடிரூபா போதாதென்றுமேலும் ஐநூற்று அறுபது கோடி ரூபாவுக்கான உப-மானியக் கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது

இவ்வாறு பிரதமர் நிதி அமைச்சருமான டி பி விஜேதுங்க பாதுகாப்பு வரித்தொடர்பாக கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பேசும்போது கூறினார்.

அங்கு மேலும் பேசிய பிரதமர் வருடத்தின் முதல் பகுதியில் இருநூற்று ஐம்பதுகோடி ரூபா வருமான வீழ்ச்சி பாதகமான சூழ் நிலைகளால் ஏற்பட்டுள்ளதுஎன்றும் அவர்கூறினார்.

இவ் விவாதத்தில் பேசிய ஐதேகட்சி உறுப்பினர் ஹரேந்திர கொரியா அரசாங்கம் வருடத்திற்கு இரண்டாயிரம் கோடி ரூபாவை இராணுவ நடவடிக்கைகளுக்கு செலவு செய்வதாகத் தெரிவித்தனர்

● யாழ். பிரதம தபாலகத்தில்

## வெளியூர்த் தபால்களை நாளை சேர்க்கவும்

யாழ். குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த்தபால்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கும்ண கப்பலில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அதனால் 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னதாக யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தோர் முன்பாகவும் உள்ளேயுள்ள பெட்டிகளில் வெளியூர் தபால்களைச் சேர்க்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

16 ஆம் திகதி வியாழன் காலை பிரதம தபாலகத்தில் இருந்து பருத்தித்துறைக்கு தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படும் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று நீண்ட கியூவரிசையில் தபால் கந்தோர் கரும பீடத்தின் முன்பாக மக்கள் நின்றதையும் காணமுடிந்தது. 06

## ஐ. தே. க. பத்திரிகையிடமும் ஆசிரியரிடமும் 1½ கோடி நட்டஈடு

லேக் ஹவுஸ் பத்திரிகைகளில் தமக்கு அகௌரவத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் வகையில் எழுதப்பட்ட கட்டுரைகளை பிரசுரித்த ஐ. தே. கவின் உத்தியோக பூர்வ ஏடான 'சியரட்ட'வும் அதன் ஆசிரியரும் இவற்றுக்கு மன்னிப்பு கோரவேண்டும் அப்படிச் செய்யத் தவறும் பட்சத்தில் அதன் ஆசிரியர் நிமால் சந்திர சிறி ஐந்து கோடி ரூபாவும் 'சியரட்ட' பத்துக்கோடி ரூபாவும் தமக்கு நட்டஈடாக செலுத்த வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன கோரியுள்ளார்

தமது சட்டத்தரணி ஜோன் வில்சன் மூலம் அனுப்பிய அறிவித்தலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

## அரச எதிர்ப் பிரசாரங்கள் எதிர்க்கட்சிகள் ஏற்பாடு

1977 இல் பதவிக்கு வந்த ஐ. தே. க. அரசு பதினைந்து வருட ஆட்சியை பூர்த்தி செய்வதையொட்டி எதிர்க்கட்சிகள் ஜூலை 19 ஆம்திகதி முதல் 21 ஆம் திகதி வரை எதிர்ப் பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன் ஒரு அங்கமாக கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு எதிர்ப்பு வாகன அணி (Protest Drive) ஒழுங்கு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளர் அனுர பண்டாரநாயக இது பற்றி விடுத்துள்ள அறிக்கையில் இந்த அரசை ஐ.தே.க-இ.தொ.கா. அரசெனக் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியா பயணம்

கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளராக கடமையாற்றி வந்த சு. சிவகுமார் புலமை பரிசில் கல்விக்காக இந்தியா சென்றுள்ளார். 1ღ

★ சொந்த ஊரிலேயே வழங்க அரசு முடிவு

பட்டப்படிப்புக்குத் தெரிவானோருக்கு

# தற்காலிக வேலை வாய்ப்பு!

பல்கலைக் கழக அனுமதிக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு பல்கலைக்கழக கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும் வரை தற்காலிகமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த மாணவர்களின் இருப்பிடங்களுக்கு அருகேயுள்ள தொழில் நிறுவனங்களில் இவர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேலை யற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்க, தனியார் துறைகளில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் அரசின் திட்டத்திற்குப் புறம்பாகவே பட்டதாரி மாணவர்களுக்கு வேலை பெற்றுக் கொடுக்கும் இந்தப்புதியதிட்டமும் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்தப் புதிய தொழில் அனுபவத் திட்டத்தின் கீழ் முதல் தடவையாக எதிர்வரும் பல்கலைக்கழக கல்வியாண்டுக்குத் தெரிவாகியுள்ள 9200 புதிய மாணவர்களுக்கு தற்காலிக வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

## தயாள் ஜயதிலகவிடம் பத்து கோடி நட்டஈடு கோருகிறார் ஜே.ஆர்.

"சண்டே ஒப்சேவர்" பத்திரிகையில் அனுருத்த திலகசிறி என்ற புனைபெயரில் தயாள் ஜயதிலக எழுதிய கட்டுரைகள் அவமதிப்பையும் கௌரவக்குறைவையும் ஏற்படுத்தியுள்ளன.

அக் கட்டுரைகளில் உள்ள பொய்யானதும் தீய நோக்கும் உடைய கூற்றுகளை நிபந்தனையின்றி வாபஸ் பெற்று பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்.

தவறின் பத்துக்கோடி ரூபாவுக்கு நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்படும். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன தமது சட்டத்தரணி ஜோன் வில்சன் மூலம் தயாள் ஜயதிலகவுக்கு அனுப்பிய அறிவித்தலில் கோரியுள்ளார்.

சம்பந்தப்பட்ட அநேகமான கூற்றுக்கள் இடம்பெற்ற 1979 தொடக்கம் 1988 வரை ஜனாதிபதி ஜயவர்த்தன அரசுத் தலைவராக இருந்ததாகவும் தற்போதைய ஜனாதிபதி பிரேமதாச அக்காலத்தில் பிரதம மந்திரியாகவும் துணைத் தலைவராகவும் இருந்துள்ளார் என்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மிகப்பெரிய அளவில்தலைதூக்கும் அகதிகள் பிரச்சினை

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பா இப்போது மிகப்பெரிய அளவில் அகதிப் பிரச்சினை தலை தூக்கியுள்ளது.

முன்னாள் யூகோஸ்லாவியா என பெரியளவில் சிதறி சீர்கெட்டுப் போன பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் தற்பொழுது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அடைக்கலம் கோரிச் சென்று வருகின்றனர்.

இலங்கை உட்பட ஆசிய நாடுகள் பலவற்றிலிருந்தும் பெருமளவு அகதிகள் ஐரோப்பிய நாடுகளில் தற்பொழுது அடைக்கலம் புகுந்துள்ளதால் நிலைமை மோசமாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

இடம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளோரில் பெரும்பாலானோர் இனிமேல் தமது தாய்நாடுகளுக்குத் திரும்பிச் செல்லவே விரும்பமாட்டார்கள். எனவும் அவர்கள் அந்தந்த நாடுகளிலேயே வேலை தேடிக் கொள்வார்கள் என்றும் ஐரோப்பிய நாடுகள் அஞ்சுகின்றன.

## மன்னார் திரும்பியோர் மீண்டும் தமிழகம் செல்ல முடிவு

தமிழகத்திலிருந்து மன்னாருக்குத் திரும்பிவந்த அகதிகளில் பலர் பட்டினிச் சாவை எதிர்கொள்வதால் மீண்டும் இந்தியாவுக்குச் செல்லத் திட்டமிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகளுக்கு வாரம் 300 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் ஒரு குடும்பத்திற்கென வழங்கப்படுகின்றன. இதனால் ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட குடும்பங்கள் பட்டினி கிடக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வாக்குகளை எண்ணும் வேலை வியாழன் ஆரம்பமாகும்

இந்திய ஜனாதிபதி தேர்தல் வாக்குகளை எண்ணும் வேலைகள் எதிர்வரும் வியாழக்கிழமை காலை ஆரம்பமாகும்.

இத்தேர்தலில் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவுக்கு ஆதரவளிக்க வேண்டுமென தமது நாடாளுமன்ற சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு காங்கிரஸ் ஐ கட்சியும், அ.இ. அ.தி.மு.கவும் கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளன.

இந்திய ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய உபஜனாதிபதியான டாக்டர் சங்கர் தயாள் சர்மாவுக்கும் பேராசிரியர் ஜீ. ஜீ. சுவெல்லுக்குமிடையே தான் போட்டி நிலவுகிறது.

புதிதாகத் தெரிவாகும் ஜனாதிபதி எதிர்வரும் 25 ஆம் திகதி பதவியேற்பார்.

## கிளிநொச்சி மாணவர்க்கு மதிய உணவாகப் பால்

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் பரீட்சார்த்தமாகப் பாரதி புரம் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்குத் தற்பொழுது பால் வழங்கப்பட்டு வருகிறது. இப் பாடசாலையில் தற்போதைய நிலையிலுள்ள சுமார் 500 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள்.

இத் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் அதனை மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இதன் மூலம் மாணவர்களுக்குப் போஷாக்கான உணவு கிடைப்பதுடன், கால்நடை வளர்ப்போருக்கும் நல்ல வருமானம் கிடைத்து வருகிறது. 55

## யாழ். பிரிவு போட்டிகள்

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாக சென்பற்றிக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய குருநகர் விளையாட்டுக்கழக நீல அணியை ஒரு கோலினால் தோற்கடித்தது.

இப்போட்டித் தொடரில் எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள அரை இறுதி ஆட்டங்களில் சென் அந்தனீஸ் அணியை எதிர்த்து சென்றிமேரிஸ் அணியும் குருநகர் மஞ்சள் அணியை எதிர்த்து சென் நீக்கிலஸ் அணியும் மோதவுள்ளன. இறுதி ஆட்டம் 17 ஆம் திகதி 4 மணிக்கு இடம்பெறும். (16)

## நோர்வேயில் விளையாட்டுவிழா

நோர்வே நாட்டின் வார்டு மாவட்டத்தில் உள்ள தமிழ்ச் சங்கம் நோர்வேயின் பல நகரங்களிலும் உள்ள தமிழ் அமைப்புகளிடையேயான விளையாட்டு விழா ஒன்றை அண்மையில் நடத்தியது.

கடந்த வருடமும் இதே போன்ற விளையாட்டு விழா ஒன்றை நோர்வே தமிழ்ச் சங்கம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.


### சிறுவிளம்பரம்

**யந்திரம்**

சகல தெய்வங்களுக்குரிய யந்திரங்களும் வியாபார வசியம் செல்வச் செழிப்பு கண்ணூறு நாவூறு போன்றவற்றிற்குரிய எல்லா விதமான யந்திரங்களும் எம்மிடம் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 96 கோவில் வீதி. (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவிலடி சந்தி) நல்லூர். 07 22

**புலமைப்பரிசில் பரீட்சை**

1992 (வி) உட்பட கடந்த கால வினாவிடை விற்பனையாகிறது. O/L, A/L கடந்த கால வினாவிடை விற்பனையாகுறது அறிவகம், 374 மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம் 070737


## வடமத்திய மாகாண எல்லைப்புற பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவு

வடமத்திய மாகாண எல்லைப்புறங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்துமாறு படையினருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது

கடந்த சனிக்கிழமை வவுனியா - மன்னார் எல்லைப் பகுதியிலுள்ள கட்டுப்பொத்த இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் முற்றாகத் தகர்க்கப்பட்டு 50க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டமையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முகாம் தாக்குதல் குறித்து உயர்மட்ட விசாரணை!

வில்பத்து வனத்தின் ஒரு புறத்தில் எல்லைப் புறமாக அமைந்திருந்த கட்டுப்பொத்த இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் முற்றாகத் தகர்க்கப்பட்டமை பற்றி ஆராய உயர்மட்ட விசாரணையொன்றுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

பலத்த பாதுகாப்புடன் இருந்த இந்த இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் முற்றாகத் தகர்த்து திட்டமிட்டதுடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்றமிருப்பது குறித்து இராணுவ உயர்மட்டம் அதிர்ச்சியுற்றுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது

## 106 நவீன துப்பாக்கிகளை புலிகள் கைப்பற்றினர்

செட்டிகுளம் - கட்டுப்பொத்த இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது 106 நவீனரகத் துப்பாக்கிகளையும் ஏனைய பல பெறுமதிமிக்க இராணுவத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்று அதன் காலைச் செய்தியறிக்கையில் தெரிவித்தது.

மூன்று கவச வாகனங்களும் ஒரு புல்டோசரும் இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டன

30 நிமிடத்தில் இந்த இராணுவ முகாம் தாக்கி அழிக்கப்பட்டதாகவும், தந்திரிமலைப் பகுதியிலிருந்து உதவிக்கு வர முயன்ற இராணுவத்தினர் பலர் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி காலகளை இழந்ததாகவும் 'புலிகளின் குரல்' மேலும் அறிவித்தது

## இன்னும் 33 வருடங்களில்.. சீனா இந்தியாவிடம் தோற்றுவிடும்!

2025 ஆவது ஆண்டில் அதாவது இன்னும் 33 வருடங்களில் சனத்தொகையில் இந்தியா, தற்போது அதிக சனத்தொகையைக் கொண்டுள்ள சீனாவை விஞ்சிவிடுமென மதிப்பீடொன்று தெரிவிக்கிறது.

இதேவேளை 1987 ஆம் ஆண்டில் 500 கோடியாக இருந்த உலக சனத்தொகை தற்போது 550 கோடியாக அதிகரித்துள்ளது.

## பஜரோக்கள் வழங்குவதற்கு எதிர்க்கட்சி ஆட்சேபம்

நிறைவேற்று பாராளுமன்ற உறுப்பினர்களாகக் கடமையாற்றும் நாற்பது பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பஜரோ ஜீப் வண்டியும் மேலதிக பிரயாணப் படிகளும் கொடுக்கப்படுவதை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கெதிராக அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை கொண்டுவந்த பின்னர் எதுவித பதவியும் வழங்கப்படாத ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் வெவ்வேறு அமைச்சுகளுடன் இணைக்கப்பட்டு நிறைவேற்றுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என அழைக்கப்பட்டு "அபிவிருத்தி" பணிகள் ஒதுக்கப்பட்டன

பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இவர்களுக்கு வழமையான படிகளும் எரிபொருள் படியும் வழங்கப்படுவதால் மேலதிக படி வழங்குவது முறையற்றது என்பதே எதிர்க்கட்சியினரின் வாதம்.

## கிளிநொச்சி ஆசிரியர்களின் இடமாற்றங்கள் நிறுத்தம்

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பிறமாவட்டங்களுக்கு ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது

அண்மையில் கல்வித் திணைக்கள அதிகாரிகளும், கிளிநொச்சி செயலக அதிகாரிகளும் கூட்டிய முக்கிய கூட்டமொன்றில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்து வருவதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (55)

## பல்லவன் கழகத்திற்கு உலகவங்கி $14\frac{1}{2}$ கோடி ரூபா உதவி

தமிழ் நாட்டில் பல்லவன் போக்குவரத்துக்கழகம் 400 புதிய பஸ்களை வாங்குவதற்கு உலக வங்கி 14 கோடி 50 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

தற்பொழுது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 800 பழைய பஸ் வண்டிகளை சேவையிலிருந்து ஒதுக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக இந்த 400 புதிய பஸ்களும் சேவைக்கு விடப்படவுள்ளன.

மொத்தம் 2300 பஸ் வண்டிகளைக் கொண்டுள்ள பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்களில் நாளாந்தம் 20 இலட்சம் பயணிகள் பயணம் செய்கிறார்கள்.

யாழ்ப்பாணம்



## போதிய பாதுகாப்புக்கர
### அகதிகள் அமைச்சரிடம் கோரிக்கை

இலங்கைக்குத் தாம் திரும் புவதாயின் தமக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென தமிழகம் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழ அகதிகள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமியிடம் கோரியுள்ளனர்.

இலங்கையில் பழைய இடத்திலோ அன்றி புதிய இடத்திலோ தாம் குடியேறுவதற்கு பாதுகாப்பே தமக்கு முக்கியமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 1-25 வரை நடைபெறும்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டில் 1110 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

## நான்கு சிறைச்சாலைகளில் பரீட்சை மண்டபங்கள்

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தடுப்பு முகாம்களிலுள்ளவர்களும் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பெலவத்த, பூஸா, பொரளை, மகஸின் சிறைச்சாலைகளில் தடுப்புக் கைதிகளுக்கென விசேட பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## வட-கிழக்கு அரச அதிபர்களுக்கு களுத்துறையில் பயிற்சிக்கருத்தரங்கு

வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்கள் கலந்து கொள்ளும் இருநாள் புனர்வாழ்வு பயிற்சிக்கருத்தரங்கு நேற்று களுத்துறையில் ஆரம்பமானது.

புனர்வாழ்வு அமைச்சின் இப்பயிற்சிக் கருத்தரங்கை வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனிவிரட்ன ஆரம்பித்து வைத்தார்.

## கல்வி மேம்பாட்டு நிதியத்துக்கு நீர்ப்பாசனத்திணைக்களம் உதவி

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் கல்வியிலும் மாணவர்களின் நல்வாழ்வுக்குமென உருவாக்கப்பட்டுள்ள கல்வி மேம்பாட்டு நிதியத்திற்கு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் குறிப்பிட்ட தொகை ரொக்கப்பணத்தை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்தநிதி பாடசாலைகளில் தற்காலிக கொட்டகைகளை அமைக்கவும் மேலதிக ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்கவும் பயன்படுத்தப்படவுள்ளது. 55

## மன்னிப்பு ஸ்தாபனத்தின் தலைவி கார் விபத்தில் பலி!

சர்வதேச பொது மன்னிப்பு ஸ்தாபனத்தின் தலைவி திருமதி ஆன்டல்ஸிசன் இத்தாலியில் கார் விபத்தொன்றில் உயிரிழந்தார்.

அவருக்கு வயது 48 விபத்துக்குள்ளான காரை இவரே ஓட்டிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆறு வருடங்களின் பின் ஆடிவேல் கோலாகலமாக!

ஆறு வருடங்களுக்குப் பின் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் ஆடிவேல் விழா கோலாகலமாக ஆரம்பமாகியது.

பல பிரபல இந்திய இசைக் கலைஞர்களும் இம்முறை ஆடிவேல் விழாவில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 2 இலட்சம் ரூபா கடன் தமிழ் மீனவர்க்கு இல்லை

திருகோணமலை மீனவர்களுக்கு 2 இலட்சம் ரூபா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் கடன் பெற விண்ணப்பித்தோரில் ஒரு தமிழ் மீனவருக்குக் கூடக் கடன் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் திருமலை கடலோரிலுள்ள தாயகம் திரும்பிய அகதிகளுக்கு வீடுகள் அமைக்க கிடுகுகள் மாத்திரம் கொடுத்து விட்டு ஏனைய பொருள்கள் வழங்கப்படவில்லை என்றும் முறையிடப்படுகிறது.

## கொழும்பு மாநகர சபையில் ஊழல் என குற்றச்சாட்டு

கொழும்பு மாநகரசபையில் ஒப்பந்த வேலைப் பத்திரங்கள் வழங்கலில் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நிதிக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை கொழும்பு மாநகரசபை ஒழுங்காகக் கடைப்பிடிக்கவில்லையெனவும் இதன் மூலம் பெரும் ஊழல் குற்றச்செயல்கள் அங்கு இடம்பெற்றுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

★ இராணுவ தரப்பு தரும் தகவல்

# புதிய வை-8 வாங்குவதானால் 80 கோடி ரூபா செலவாகும்

இயக்கச்சிப்பகுதியில் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட 'சினச்சவை' 'வை-8' ரக புதிய விமானம் ஒன்றை வாங்குவதற்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 80 கோடி ரூபா) செலவிட வேண்டியிருக்கும் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான இரு விமானங்களே இலங்கையிடம் இருக்கின்றபோதிலும் அவற்றில் ஒன்று பழுதடைந்து பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.

இராணுவத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ஆள், ஆயுதப் பற்றாக்குறையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஒரு விமானத்தை இழந்தது அவர்களுக்கு ஒரு பின்னடைவே என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'வை-8' விமானத்தில் 'பிளக் பொக்ஸ்' இருக்கவில்லையாம்

கடந்த வாரம் இயக்கச்சியில் விடுதலைப்புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட 'வை-8' விமானத்தில் ஏனைய விமானங்களைப்போல் 'பிளக் பொக்ஸ்' (கறுப்புப் பெட்டி) என்னும் தகவல் பதிவு கருவி இருக்கவில்லை எனக் கூட்டுப் படைத் தலைமையகம் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விமானம் வட பகுதியில் யுத்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் பட்டு வந்தபோதிலும் அதில் 'பிளக் பொக்ஸ்' பொருத்தப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கில் புதிய பாடசாலைகள்

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கிழக்கில் எட்டு புதிய பாடசாலைகளை அமைக்கவுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே இப் புதிய பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளன.

## ஜேசுதாஸ் இலங்கை வருகிறார்

பிரபல இந்தியப் பின்னணிப் பாடகர் கே. ஜே. யேசுதாஸ் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார்.

கொழும்பு, நீர்கொழும்பு, மலையகப் பகுதிகளில் இவரது குழு இசை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

## ஹொக்கி போட்டிகள்

யாழ். ரேட்டறிக் கழகம் நடாத்தும் ஏழு வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் ஹொக்கிப் போட்டித் தொடரின் அரை இறுதி ஆட்டங்கள் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொழுது முதல் இடம்பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை இறாகிளைப்பர் அணி அதனை எதிர்த்தாடிய யாழ், பல்கலைக் கழக 'பி' பிரிவு அணியை ஒன்றுக்கு பூச்சியம் என்ற கோல் அடிப்படையில் வென்று இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இன்னொரு அரை இறுதிப் போட்டியில் சப்ரா அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணி ஆடியது. கொடுக்கப்பட்ட நேரத்திலும் சரி மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் கோல்கள் எதையும் போடவில்லை. பின் கொடுக்கப்பட்ட பெனால்டியிலும் தலா ஒரு கோலைப் போட்டதினால் பூவா தலையா போட்டதில் பல்கலைக்கழக அணி வென்றது. (16)

## இலங்கை பொலிஸார் உதவினராம்

கொழும்பு வந்திருந்த தமிழக பொலிஸ்குழு 10 தினங்கள் தங்கியிருந்துவிட்டு மீண்டும் சென்னை திரும்பியுள்ளது.

கொழும்பில் இக்குழுவிற்கு இலங்கைப் பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்கியதாகவும், பல தடயங்களை அவர்களால் பெற முடிந்ததாகவும் சென்னை திரும்பிய இக்குழுவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

## சத்திர சிகிச்சைக்கு பாப்பாண்டவர் உள்ளாகலாம்

ரோம் மருத்துவமனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்ட பரிசுத்த பாப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போலுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி ஏற்படலாமென மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடும் வயிற்று வலியினால் பாதிக்கப்பட்ட நிலையில் இவர் நேற்று முன்தினம் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தார்.

சுமார் 10 நாள்களுக்கு அவர் மருத்துவ மனையில் இருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

முந்திய திருத்தந்தைகள் தாம் மருத்துவ சிகிச்சைக்கு உள்ளாவது குறித்து பொது மக்களுக்கு அறிவிப்பது இல்லை என்ற போதிலும் திருத்தந்தை இரண்டாம் அருளப்ப சின்னப்பர் கடந்த ஞாயிறு ஆசீரின் போது தான் மருத்துவ சிகிச்சைக்கு செல்வதாக பகிரங்கமாக அறிவித்தார்.

## வளர்ந்தோர் கல்வி நெறி ஆகஸ்ட் 3 இல் ஆரம்பமாகும்

யாழ்ப்பாண மாவட்டக் கல்வித்திணைக்கள வளர்ந்தோர் கல்விப் பிரிவின் 1992 ஆம் ஆண்டுக்கான தொழில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறிகள் ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறிகளும், பயிற்சி நெறிகள் நடைபெறும் பாடசாலைகளும் வருமாறு:

உடையமைத்தல்:- வட்டு. இந்துக் கல்லூரி, மல்லாகம் ம. வி, இணுவில் சைவ பிரகாச ம. வி, கரவெட்டி திருநெல்வேலி வி. சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வி, பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி, தேவரயாளி இந்துக் கல்லூரி.

ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு:- மல்லாகம் ம. வி. மானிப்பாய் இந்துக்கல்லூரி, கனகரத்தினம் ம.ம.வி. சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வி, பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி.

வீட்டு மின்னிணைப்பு:- இணுவில் சைவமகாஜன ம.வி, கொக்குவில் திருநாவுக்கரசு ம.வி, கரவெட்டி தேவரயாளி இந்துக்கல்லூரி,

ஹோட்டல் வியாபாரம் (ரேடர்):- மருதனாமடம் இராமநாதன் கல்லூரி, அச்சுவேலி புனித திரேசா ம.வி,

தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சு:- புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி

வானொலி திருத்துதல்:- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி.

விவசாய விஞ்ஞானம்:- மருதனாமடம் இராமநாதன் கல்லூரி

பத்திரிகையாளர் பயிற்சி:- யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயம்

கைப்பணிப் பயிற்சி:- வண்ணை நாவலர் ம.வி.

குளிரூட்டி திருத்துதல்:- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

மரத்தளபாட உற்பத்தி:- கரவெட்டி தேவரயாளி இந்துக்கல்லூரி

மேற்படி பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் 20 07 92 திங்கட்கிழமைக்கு முன் அந்தப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் பாடசாலையை விட்டு நீங்கியோராகவும் 25 வயதுக்கும் குறைந்தோராயும் இருத்தல் வேண்டும்.

ஆரம்பமாக இருக்கும்பயிற்சி நெறிகளின் போதனாசிரியர்களுக்கான கூட்டம் 16-7-92 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

## மட்டு. மாணவர்களுக்கு உலக பல்கலைக்கழக சேவை உதவி

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைய அசம்பாவிதங்களினால் பாதிப்புற்ற மாணவர்களுக்கும், இளைஞர் யுவதிகளுக்கும் கனடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனம் பல உதவிகளை வழங்க முன்வந்துள்ளது

இவர்கள் உயர்கல்வியைத் தொடர இந் நிறுவனம் பல உதவிகளை வழங்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## ★ தீவக உ. அ. அ: பிரிவுகளை யாழ். மாவட்டத்துடன் இணைக்கும் முடிவு இல்லை

தனித்தனியாக இயங்கும் தீவக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும், பல நோ. கூ. சங்கங்களையும் யாழ். மாவட்டத்துடன் இணைப்பதற்கு எதுவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை என யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

ஆனால் தீவுப்பகுதியில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பல நோ. கூ. சங்கங்களும் தனித்தனியாக அங்கே இயங்குவதாகவும் யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன 47

## நோயாளர்கள் கப்பலில் 17ஆம் திகதி பயணமாவர்

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளி குமண கப்பல் கொழும்பு செல்ல இருப்பதனால் கொழும்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவதற்கென யாழ் பெரியாஸ்பத்திரி வைத்திய நிபுணர்களினால் சிபாரிசு செய்யப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்ட நோயாளர்கள் அன்று காலை 6 மணிக்கு மேற்படி பெரியாஸ்பத்திரியில் சமூகம் கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குமண கப்பலில் செல்லும் நோயாளர்கள் தங்களுக்கு இரண்டு நாளுக்கு தேவையான உணவு குடிநீர் ஆகியவற்றையும் எடுத்து வருமாறும் கேட்கப்படுகின்றனர்.

இக்கப்பலில் நாற்பதுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் கொழும்பு செல்லவுள்ளனர். 07

## ★ கூட்டுப்படைத் தலைமையிலும் முப்படைத் தளபதிகள் செயற்திறன் உடையவர்களாம்

விடுதலைப் புலிகள் முப்படைத் தளபதிகளுக்கு இக்கட்டை வைப்பதாக செய்தி வெளியிட்டுள்ள சண்டே ஒப்சேவர் பத்திரிகை அவர்கள் கூட்டாகவும் சுயமாகவும் இயங்குவதாகவும் குறுகிய காலத்தில் முன்பு எப்பொழுதுமே பெற்றிராத வெற்றியைப் பெற்றுள்ளனரென்றும் புகழ் மாலை சூட்டியுள்ளது.

கூட்டுப்படை தலைமை சுத்தமாக முன்பு தேடி அழிக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் விடுதலைப் புலிகள் அந்த இடங்களுக்கு மீண்டும் செல்ல வாய்ப்பு இருந்தது. இப்பொழுது தாக்குதல் நடத்தி பிடித்த பிரதேசத்தில் தொடர்ந்து இருப்பது என்ற திட்டம் வெற்றியளித்துள்ளது எனவும் இச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதனால் தான் விடுதலைப் புலிகள் முப்படைத் தளபதிகளை குறிவைக்கிறது எனவும் கூறப்பட்டுள்ளது.

முன்னைய கூட்டுப்படைத் தலைமையை செயற்திறனற்றது எனக் காட்டுவதும் விடுதலைப் புலிகள் குறிவைக்கிறார்கள் எனக் கூறி முப்படைத் தளபதிகளின் முக்கியத்துவத்தை அதிகரிப்பதுமே இச் செய்தியின் நோக்கமெனக் கருதப்படுகிறது.

## கொழும்பு மேயருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு மாநகர முதல்வர் ரத்னசிறி ராஜபக்ஷவுக்கெதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப்பிரேரணை ஒன்றைக்கொண்டுவரவுள்ளதாக சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மாநகர சபைக்கு சொந்தமான நாற்பது பேர்ச் காணியை நவலோக ஹொஸ்பிடல் லிமிட்டட்டுக்கு குத்தகைக்கு விடுவது ஏழை மக்களுக்கு மாநகரசபை செய்யும் அநீதியென குறிப்பிட்டுள்ளார்.

> **இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை**
>
> **வலிகாமம் வடக்குப் பிரிவு**
>
> **அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்தல் சம்பந்தமான கூட்டம்**
>
> மேற்படி 14. 07. 92 (செவ்வாய்க்கிழமை) காலை 9 30 மணிக்கு, அருணோதயக் கல்லூரி, அளவெட்டியில் நடைபெறும் கூட்டத்திற்கு இப்பிரிவிலுள்ள தொண்டர்களையும், அங்கத்தவர்களையும், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களையும், சமூக சங்கங்களின் அங்கத்தவர்களையும் அழைக்கின்றோம்.
>
> இப்படிக்கு
> நிர்வாகம்.
>
> 07041

# இணைப்பைசுதந்திரக்கட்சிஎதிர்க்க ஹெல உறுமய காரணம்

ஏழு தமிழ்க் குழுக்களும் சுதந்திரக் கட்சித் தலைவியைச் சந்தித்து தமது நான்கு அம்சத்திட்டம் பற்றி எடுத்துக்கூறி ஆதரவு கோரியபோது அவற்றை கட்சியின் மத்திய குழுவின் பரிசீலனைக்கு விடுவதாக அவர் தெரிவித்திருந்தும் ஹெல உறுமயவின் நடவடிக்கைகளால் சாதகமான முடிவெதையும் அவரால் முன்னெடுக்க முடியவில்லையென கூறப்படுகிறது

மத்திய குழுக் கூட்டம்நடைபெறுவதற்கு இரண்டுநாட்கள் முன்பாக நடைபெற்ற கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த விடயத்தை ஹெல உறுமயவின் திலக் கருணாரத்ன எழுப்பினார். இணைப்புக்கு சுதந்திரக்கட்சி எதிர் என்பதால் மத்திய குழு இவ்விடயத்தை பரிசீலிக்க வேண்டியதில்லையென அவர் வாதிட்டார்.

ஜினதாச நியதிபால ஹேம குமாரி நாணயக்கார எம். எம். குணசேகர ஆகியோர் திலக் கருணாரத்னவை ஆதரித்தனர்

இந்த நிலையில் எம். கே. டி. எஸ். குணவர்த்தன பாராளுமன்றக்குழு இதனை எதிர்ப்பதென முடிவு செய்கிறதென முன் மொழிந்த பிரேரணை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது

இதைத் தொடர்ந்து புதன் கிழமை நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் அனுர பண்டார நாயக்காவின் தலையீட்டினால் இந்த விடயத்தை தெரிவுக்குழுவின் முடிவுக்கு விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது

தமது கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவுக்குழுவுக்கு தலைமைதாங்குவதாலும் அவரின் கைகளைக் கட்டுவது முறையல்லவென்பதாலேயே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டதெனத் தெரிகிறது ஆனால் இணைப்பை எதிர்ப்பதில் சுதந்திரக்கட்சி உறுதியாக உள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கல்குடாவில் புதிய முகாம்

மட்டக்களப்பு கல்குடாவில் புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு குடியேற்றப்பட்டு வரும் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு அளிக்கவே இந்த முகாம் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## 3 தினங்களில் தபால் விநியோகம்

கடந்த வாரம் குமண கப்பலில் வந்த தபால்கள் யாழ் பிரதம தபாலக பகுதிக்குள் கடந்த மூன்று தினங்களில் விநியோகிக்கப்பட்டன

ஊரடங்குச்சட்ட நேரத்திலும் தபால் ஊழியர் அதிகாரிகள் இவற்றை தரம் பிரித்து உரியவர்களுக்கு விநியோகித்தனர்.

இதேபோல குடாநாட்டின் ஏனைய தபாலகங்களிலும் தபால்கள் விநியோகிக்கப்பட்டன. 06

## 13 வயதில் பட்டதாரி

உலகின் அதி குறைந்த வயதில் பல்கலைக்கழக பட்டதாரியாக வெளியேறி இலங்கை தமிழர் வழிவந்தான் றலான கணேஷ் சிற்றம்பலம் என்ற சிறுவன் சாதனை படைத்துள்ளான்.

13 வயதான இச்சிறுவன் லண்டனில் கணித சிறப்பு பிரிவு பல்கலைக்கழக பட்டதாரியாக வெளியேறியுள்ளான்.

ஒப்சேவர்

யின் கீழ் நவீன இராணுவ சாதனங்களை கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் முகாம் புலிகளினால் அழிக்கப்பட்டது இராணுவ தலைமையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரச

முடியாது என்றும் இக்கட்டுரையில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலாதிக்கத்தை முறியடிக்க

ஈரண்டாவது தமிழீழ யுத்தத்தில் ஆரம்ப கட்டத்தில் இராணுவத்திற்கு அதிக அழிவுகளை ஏற்படுத்தி வன்னி பிராந்தியத்தில் தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டிருந்த முகாம்களிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறச்செய்வதே விடுதலைப் புலிகளின் உத்தியாக இருந்தது.

ஆனால் இப்பொழுது அரசாங்கத்தின் வான்பல மேலாதிக்கத்தை இல்லாமல் செய்வதே விடுதலைப் புலிகளின் அக்கறையாகவுள்ளது என அவதானிகள் கருதுகின்றனர்.

அரச படைகளின் கடற்படை மேலாதிக்கத்தையும் வான்பல மேலாதிக்கத்தையும் தற்காலிக முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென விடுதலைப் புலிகள் இனங்கண்டுள்ளனர்.

கடந்த ஒன்றரை வருடத்தில் இந்த நோக்கில் அவர்கள் செயற்பட்டு முள்ளனர் என நிபுணர்கள் கருதுவதாகவும் இக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ★ தொண்டாஇணைப்பை ஆதரிப்பது மனைவியாகவும்,ஆசைநாயகியாகவும் இருப்பதற்குச் சமமாம்

"அமைச்சர் தொண்டமான் ஒரே சமயத்தில் இரண்டு பாத்திரங்களில் செயல்படுவதென்பது ஒரு பெண் ஒரு மனிதனின் மனைவியாகவும் இன்னொருமனிதனின் ஆசைநாயகியாகவும் இருப்பதற்கு சமமானது இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை

இவ்வாறு தாம் மூரக்களில் பேசமுடியும் என அமைச்சர் தொண்டமான் கூறியிருப்பது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் சுதந்திரக்கட்சி எம். பி. எஸ். எல். குணசேகர கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்பை இ. தொ. கா. தலைவர் என்ற முறையில் ஆதரிப்பது அதை எதிர்க்கும் ஐ. தே. க. அமைச்சரவையின் அங்கத்தவராகவிருப்பதற்கு பொருத்தமற்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஏரிக்கரைப் பத்திரிகைகள் சுதந்திரக்கட்சிபகிஸ்கரிப்பு

ஏரிக்கரைப் பத்திரிகைகளை பகிஷ்கரிப்பதென சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது சுதந்திரக்கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி கட்சி ஐக்கியத்தைக் குலைத்து கட்சித் தலைமைக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயல்வதும் இப்பத்திரிகைகளுக்கெதிரான குற்றச் சாட்டுகளில் அடங்கும்.

இப்பத்திரிகைகளுக்கு பேட்டிகள் வழங்குவது இல்லையென்றும் அவற்றில்வரும்செய்திகளுக்கு பதிலளிப்பது இல்லையென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை அமுல்செய்வதற்கு ஓர் உப-குழுவையும் கட்சி நியமித்துள்ளது

## என்னைப்பற்றி குமார் பேசமுடியாது - மோதிலால்

யாழ்ப்பாணத்திலுள்ள செயற்குழுவோ அல்லது திரு குமார் பொன்னம்பலமோ தமிழ்க் காங்கிரசுக்கும் எனக்கும் எதுவித தொடர்புமில்லையென எனக்கு அறிவிக்கவில்லை செயற்குழுவின் தீர்மானமின்றி தமிழ்காங்கிரசில் எனது நிலைபற்றி பத்திரிகைகளுக்குக் கருத்து தெரிவிக்க திரு பொன்னம்பலத்திற்குஎதுவித உரிமையும் இல்லை

இவ்வாறு நாம் தமிழ்காங்கிரஸ் கட்சியின்துணைத்தலைவர் பதவியில் இல்லை யென அக்கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் வெளியிட்ட கருத்துக்கு பதிலளித்த மோதிலால் நேரு சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்

திரு. பொன்னம்பலத்தின் கருத்து பதிலளிக்க தகுதி பெறவில்லை! நான் சொத்து பேரம் நோயினால் பீடிக்கப்படவில்லை ஒருவர்தமது தனிப்பட்ட ஏமாற்றங்களுக்குஇனப் பிரச்சினையை பலிக்கடாவாக்க கூடாது என்றும் மோதிலால் நேரு கூறியுள்ளார்.

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஐ. தே. க. விசேட குழு இன்று கூடுகிறது

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் ஐ. தே. க. சார்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆலோசனைகளைப் பரிசீலிப்பதற்கென பிரதமர் டீ. பி. விஜேதுங்க தலைமையில் நியமிக்கப்பட்ட அக்கட்சியின் உயர் மட்டக் குழு இன்று கூடுகிறது

எனினும் தெரிவுக்குழு முன் சமர்ப்பிப்பதற்கு தற்போது எதுவித திட்டமும் இல்லை யென இக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 14-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது